www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

Ts9T

**தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**

**மூன்றாம் இடைப்பருவத் தேர்வு - பிப்ரவரி 2023**

20-02-2023.

**வகுப்பு 9**

**தமிழ்**

கால அளவு: 1.30 மணிநேரம் | மதிப்பெண்கள்: 50

**அ) உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **8×1=8**

1) 'ஞானம்' என்பதன் பொருள் யாது?

அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

2) காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது - இக்குறளின் ஈற்றுச் சீரின் வாய்பாடு யாது?

அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு

3) முண்டி மோதும் துணிவே இன்பம் - இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது

அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி

4) தமிழ்ப் புலவரைப் போலவே உரோமச் சிந்தனையாளர் கொண்ட கொள்கை

அ) நிலையற்ற வாழ்க்கை ஆ) பிறருக்காக வாழ்தல்

இ) இம்மை மறுமை ஈ) ஒன்றே உலகம்

5) வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றுத் தந்த நூல்

அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின் இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்

6) யா மரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?

அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல்

**பாடலைப் படித்து விடை தருக.**

பெருமரத்துடன் சிறு கமுகு போட்டியிடுகிறது
அதுவே வாழ்க்கைப் போர்
முண்டி மோதும் துணிவே இன்பம்
உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி

7) இப்பாடலின் ஆசிரியர் ..........

அ) லா வோட்சு ஆ) ந.பிச்சமூர்த்தி இ) நா.முத்துக்குமார் ஈ) கல்யாண்ஜி

8) பெருமரம் - இலக்கணக் குறிப்பு தருக.

அ) வினைத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை

இ) பண்புத்தொகை ஈ) உம்மைத் தொகை

**ஆ) எவையேனும் ஆறனுக்கு விடை தருக. (16 - கட்டாய வினா)** **6×2=12**

9) கமுகுமரம் எதைத் தேடியது?

10) பிடிபசி களைஇய பெருங்கை வேழம் – இவ்வடியில் உள்ள இலக்கணக் குறிப்புகளைக் கண்டறிக.

11) 'பகுத்தறிவு' என்றால் என்ன?

12) தமிழ்ச் சான்றோர்க்கும் உரோமையச் சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு யாது?

13) அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

14) மறுநாள் வீட்டுக்கு வருவதாக முரளி கூறினார். **(நேர்க்கூற்றாக மாற்றுக)**

15) **கலைச்சொல் தருக.**

1. Philosophy 2. Humane

16) கோழிக்குட்டிகளைப் பிடிக்கப் பூனைக் குஞ்சுகள் ஓடின.
(பெயர்மரபுப் பிழைகளைத் திருத்துக)

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



**இ) எவையேனும் நான்கனுக்கு விடை தருக. (17 - கட்டாய வினா)** **4×3=12**

17) **அடிமாறாமல் எழுதுக.**

'ஆக்குவது' எனத் தொடங்கும் யசோதர காவியப் பாடல்

**(அல்லது)**

'சைக்கிளில் வந்த' எனத் தொடங்கும் அக்கறை கவிதை

18) சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.

19) உலக இலக்கியத்தில் காண இயலாத அரிய கருத்துகளாக ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடுவன யாவை?

20) 'யா' மரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக? விளக்குக.

21) உருவக அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

**ஈ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **2×5=10**

23) அ) வாழ்க்கைப் போரில் வெற்றி பெறுவதற்கான வழிகளைக் கமுகுமரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்.

**(அல்லது)**

ஆ) நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக.

24) **அ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



SIVAKUMAR. M,
Sri Ram Matric
HSS,
Vallam-627809.
Tenkasi Dist.

**உ) விரிவான விடையளிக்க.** **1×8=8**

25) அ) மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

- - - - - -

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com